<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 138/2025</u>

<u>LW : 10, PW : 12</u>

<u>07.04.2026</u>

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. ரேவதி | க / பெ. | திரு. இரவி |
| கிராமம் | : | கானூர் | தாலுக்கா | கீழ்வேளூர் |
| தொழில் | : | விவசாயம் | வயது | 49 |

**<u>எதிரி 1 இறந்தார். எதிரி 2 ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி திருமதி, ரேவதியை பொருளாதார குற்றப்பிரிவு தலைமை காவலர் A. பிரசன்னா HC No. 631 அடையாளம் காட்டினார்.</u>**

**<u>முதல்விசாரணை</u>**

நான் கீழ்வேளூர் தாலுக்கா கானூரில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் திருத்தங்கூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்திருந்தேன். எனது சேமிப்பு கணக்கு எண்.1772 ஆகும். என்னிடம் காட்டப்படும் **வரிசை எண் 13 சேமிப்பு கணக்கு புத்தகம் எண் 6 பக்கம் 289 எனது சேமிப்பு கணக்கு பக்கம் ஆகும். அந்த சேமிப்பு கணக்கு பக்கம் அ.த.சா.ஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது கூட்டுறவு வங்கி சேமிப்பு கணக்கில் வெறும் ரூ.1,000/- தான் இருந்தது. ஆனால் எனது சேமிப்பு கணக்கில் ரூ.15,000/- செலுத்தி காசோலை மூலமாக அந்த பணத்தை எடுத்திருப்பதாக என்னை விசாரித்தார்கள்.

நான் எந்த வித காசோலையும் கொடுக்கவில்லை. மேலே சொன்ன பணம் ரூ.15,000/- த்தை எனது சேமிப்பு கணக்கிலிருந்து நான் எடுக்கவில்லை. மேற்சொன்ன பணத்தை 1997 ஆம் வருடத்தில் எனது சேமிப்பு கணக்கில்

செலுத்தி காசோலை மூலம் எடுக்கப்பட்டதாக சொன்னார்கள். அந்த சமயத்தில் ராமகிருஷ்ணன் என்பவர் திருத்தங்கூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் செயலாளராகவும், இரவிக்குமார் என்பவர் அதே கூட்டுறவு வங்கியில் வேலை செய்தார்கள் என்று சொன்னார்கள்.

கூட்டுறவு வங்கியிலிருந்து என்னை விசாரித்தார்கள். **என்னிடம் காட்டப்படும் பிரிவு 81 விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. அந்த பிரிவு 81 வாக்குமூலம் அ.த.சா.ஆ 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இதுகுறித்து பொருளாதார குற்றப்பிரிவு போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>2ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

திருத்தங்கூர் வேளாண்மை கூட்டுறவு வங்கியில் நான் சேமிப்பு கணக்கு வைத்திருந்தற்கு எனக்கு வங்கி பாஸ்புத்தம் வழங்கி இருந்தார்கள் என்றால் சரிதான். நான் அதனை எடுத்துவரவில்லை. பொருளாதார குற்றப்பிரிவு போலிசார் விசாரித்தபோதும், கூட்டுறவு வங்கி பிரிவு 81 விசாரணை அதிகாரி விசாரித்தபோதும் என்னிடம் இருந்த பாஸ்புத்தகத்தை கேட்டு விசாரித்தார்கள் என்றால் என்னிடம் அப்போது பாஸ்புத்தகம் இல்லை. காணாமல் போய்விட்டது.

என்னிடம் முதல் விசாரணையில் காண்பிக்கப்பட்டு வங்கியின் பதிவேட்டில் என் பெயரில் ரூ.15,000/- வரவாகியும், பின்னிட்டு அது எடுக்கப்பட்டதற்கான எந்த குறிப்பும் இல்லை என்றால் அதன் விவரங்கள் எனக்கு தெரியவில்லை. சாட்சியிடம் தற்போது காட்டப்படும் அ.சா.ஆ.14 ல் எனது பெயர் ரேவதி தகப்பனார் பெயர் மாரிமுத்து படையாச்சி கோமல் கிராமம் என குறிப்பிட்டுள்ள கணக்கு எண் 1722 ல் எனக்கு ரூ.15,000/- வரவு வந்ததாகவும், அது பைசல் செய்யப்பட்டதாகவோ குறிப்புகள் இல்லை என்றால் சரிதான்.

மேலதிகாரிகள் அவர்கள் செய்த தவறை சரிசெய்வதற்காக தவறாக எதிரிகளை இணைத்து என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.07 18:38:53 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்